தினமணி

**சிறிய வெங்காய நாற்றங்கால்: வேளாண் அலுவலர்கள் ஆய்வு**

First Published : 28 Feb 2012 03:23:22 PM IST

பெரம்பலூர், பிப். 27: பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் ஒன்றியத்தில் பயிரிடப்பட்டுள்ள சிறிய வெங்காய நாற்றங்கால் வயல்களை மாவட்ட தோட்டக்கலை துணை இயக்குநர் வே. செப்ந்தரராஜன், ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மைய தோட்டக்கலை தொழில்நுட்ப வல்லுநர் ஜெ. கதிரவன் ஆகியோர் அண்மையில் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

பின்னர், மாவட்ட தோட்டக்கலை துணை இயக்குநர் வே. செப்ந்தரராஜன் கூறியது:

தேசிய தோட்டக்கலை இயக்கத்தின் நிதியுதவியுடன், பெரம்பலூர் மாவட்டத்தில் 2,500 ஹெக்டேர் பரப்பளவில் விதை மூலம் சிறிய வெங்காயம் உற்பத்தி செய்யும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம், சிறிய வெங்காயம் அதிகம் சாகுபடி செய்யும் பகுதிகளான ஆலத்தூர் மற்றும் பெரம்பலூர் கோட்டத்தில் மாசிப்பட்டத்தில் 1,000 ஹெக்டேர் பரப்பிலும், வைகாசிப் பட்டத்தில் 15,00 ஹெக்டேர் பரப்பிலும் நடைமுறை படுத்தப்பட உள்ளது.

இதன் முதல் கட்டமாக வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமையின் (அட்மா) நிதியுதவி மூலம், ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மையம் மற்றும் தோட்டக்கலைத் துறை இணைந்து, குறுகிய கால ஆராய்ச்சியாக சிறிய வெங்காய நாற்றங்கால் தொழில்நுட்பம் ஆலத்தூர் கோட்டத்தில் 17 கிராமங்களிலும், பெரம்பலூர் கோட்டத்தில் 8 கிராமங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்த 25 கிராமங்களிலிருந்து கிராமத்துக்கு ஒரு விவசாயி என்ற வீதத்தில் தேர்வு செய்யப்பட்டு, அவர்களது வயலில் சிறிய வெங்காய நாற்றங்கால் அமைக்கும் தொழில்நுட்பம் குறித்து செயல்விளக்கம் கடந்த மாதம் செய்து காண்பிக்கப்பட்டது.

இந்த சிறிய வெங்காய நாற்றங்காலில் தோன்றும் களைகளை அவ்வப்போது பறித்து விடுமாறும், நாற்றுகளில் ஏற்படும் நுனிக் கருகலைக் கட்டுப்படுத்த, மாங்கோசெப் பூஞ்சாணக் கொல்லியை ஒரு லிட்டர் நீருக்கு 2 கிராம் அளவில் கலந்து தெளிக்குமாறும், இலைப்பேன்களைக் கட்டுப்படுத்த அசிட்டமாப்ரிட் பூச்சிக் கொல்லியை ஒரு லிட்டர் நீருக்கு ஒரு கிராம் என்ற அளவில் கலந்து தெளிக்குமாறும் விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது என்றார் அவர்.

இந்த ஆய்வின் போது, வேளாண்மை உதவி அலுவலர்கள் வீரபாண்டியன், பாலசுப்பிரமணியன் மற்றும் விவசாயிகள் பலர் உடனிருந்தனர்.

**தலையங்கம்:நதியின் பிழையன்று...**

First Published : 29 Feb 2012 01:41:31 AM IST

இந்திய நதிகள் இணைப்பு குறித்து ஆலோசனை வழங்க, 2002-ம் ஆண்டு அன்றைய பிரதமர் வாஜ்பாய் ஏற்படுத்திய குழு தனது அறிக்கையை அரசுக்கு அளித்தது. தென்னிந்திய நதிகள் இணைப்பு மற்றும் வடஇந்திய நதிகள் இணைப்பு என்று இரு வகையாகப் பிரித்துச் செயல்படுத்தலாம் என்று ஆலோசனை வழங்கியது. எந்தெந்த நதிகளை எவ்வாறு, எந்தெந்த நதிகளுடன் இணைத்து, இந்தியா முழுவதிலும் நீர்வளத்தைப் பெருக்க முடியும் என்றும் விரிவான அறிக்கை தந்தது இக்குழு.

ஆனாலும் கடந்த பத்து ஆண்டுகளாக இதைப் பற்றி எதிர்க்கட்சிகள் மட்டுமே பேசுகின்றன. இதை அமலாக்குவதற்கான எந்த முயற்சியும் மத்திய அரசால் மேற்கொள்ளப்படவில்லை.

இந்நிலையில்தான், காலக்கெடு நிர்ணயித்து திட்டத்தை நிறைவேற்றுங்கள் என்று அறிவுறுத்தியுள்ளது உச்ச நீதிமன்றம். இதைச் செயல்படுத்துவதற்கான உயர்நிலைக் குழு ஒன்றையும் அறிவித்துள்ளது. இந்திய நதிகளை இணைப்பது என்பது இன்றைய அரசியல் சூழலில் சாத்தியமானதா என்பதும், அப்படியே சாத்தியப்பட்டாலும் அதன் பின்விளைவுகள் எப்படி இருக்கும் என்பதும் யோசனைக்குரியவை.

நதிகளை இணைக்க குறைந்தபட்சம் ரூ.5 லட்சம் கோடி செலவாகும் என்பதால்தான் இக்கனவு நனவாகக் காலதாமதம் ஆகின்றது என்கின்ற வாதம் மேம்போக்கானது. இத்திட்டத்துக்குப் பணம் தடையில்லை. மாநில அரசுகளும், மக்களின் அச்ச உணர்வில் பிழைப்பு நடத்தும் அரசியல்வாதிகளும்தான் மிகப்பெரும் தடை. இது சாதாரண மக்களுக்கே தெரிந்திருக்குமென்றால், நீதிமன்றத்துக்கு ஓரளவு உண்மை புரிந்திருக்கவே செய்யும்.

இரு மாநிலங்களுக்கு இடையிலான நதிநீர்ப் பிரச்னைகள் முடிவுக்கு வராத, வரமுடியாத பிரச்னையாக மாறிக்கொண்டிருக்கிறது என்பதைத்தான் காவிரி மற்றும் முல்லைப்பெரியாறு விவகாரத்தில் தமிழகம் நேர்கொள்ளும் உண்மை. இதே நிலை ஆந்திரத்தில் கிருஷ்ணா நிதிநீர்ப் பிரச்னையில் இருக்கிறது. கங்கை, யமுனை நதியிலும் இந்தச் சிக்கல்கள் இருக்கின்றன. நதிநீர்ப் பங்கீட்டுப் பிரச்னையில், மத்திய கூட்டணியில் அங்கம் வகிக்கும் இரண்டு கட்சிகள் பதவியில் இருக்கும் மாநிலங்களாக இருந்தாலும்கூடத் தீர்வு காண இயலவில்லை என்பதுதான் நிலைமை. நதிநீர்ப் பிரச்னைகளைப் பொறுத்தவரையில், மாநில அரசுகள் உச்ச நீதிமன்றத்தையும் மத்திய அரசையும் துச்சமாக மதிக்கின்ற போக்கும் தலையெடுக்கத் தொடங்கிவிட்டது. அதற்கு முக்கியமான காரணம் பலமான மத்திய அரசும், ஒட்டுமொத்த இந்தியாவிலும் செல்வாக்குள்ள மத்திய அரசின் தலைமையும், அரசியல் லாப நஷ்டங்களை மீறிய தேசியப் பார்வையும் இல்லாமல் இருப்பதுதான்.

நதிகளைத் தேசியமயமாக்கி, நதிநீர் முழுவதும் இந்திய நடுவண் அரசின் கட்டுப்பாட்டில் வந்தால் மட்டுமே நதிகள் இணைப்பு என்பது சாத்தியமாகும். ஆனால், நதிகள் மீதான தங்கள் உரிமையை மாநில அரசுகள் விட்டுக்கொடுக்குமா? இதில் எந்தவொரு மாநிலத்தையும் தனித்துச் சொல்ல வேண்டியதில்லை. நதிகள் உள்ள எல்லா மாநிலங்களும், "தனக்கு மிஞ்சினால் தானம்' என்ற நிலைப்பாட்டில் தெளிவாக உள்ளன.

அடிப்படையில், நதிகளை இணைக்கும் திட்டம் என்பது வெள்ள கால மிகை நீர் வீணாகக் கடலில் சென்று கலக்காதபடிக்கு, பல இடங்களுக்கும் வாய்க்கால் மூலம் பிரித்து எடுத்துச் செல்லுதல் என்பதுதான். வாய்க்கால் அமைப்பதைவிட, மற்ற சிறு நதிகளுக்கு மடைமாற்றி விடுவதுதான் நதிகள் இணைப்புத் திட்டம்.

இது உண்மையில் நதிகளின் மிகைநீர்ப் பயன்பாட்டுத் திட்டம். இத்திட்டம் அமலுக்கு வந்தால் ஏதோ இணைக்கப்பட்ட நதிகளுக்கு இடையே 365 நாளும் வாய்க்காலில் தண்ணீர் ஓடிக்கொண்டே இருக்கும் என்பதுபோன்ற ஒரு தோற்றமயக்கம் பலரிடமும் உள்ளது. அதுவல்ல நிஜம். முக்கிய நதிகளில் வெள்ளம் கரைபுரண்டு, மிகையாக ஓடிக்கொண்டிருக்கும்போது அதைத் திசை திருப்பி, வேறு இடங்களுக்குக் கொண்டுபோய்ச் சேமித்துப் பயன்படுத்துவதுதான் இந்தத் திட்டத்தின் அடிப்படை நோக்கம்.

மிகையாக ஓடிவரும் நீர்தான் மற்ற நதிகளுக்குத் திருப்பப்படும் என்று புரிய வைத்தாலும், நதிகளில் வழக்கமாக வரும் நீரின் அளவே குறைந்துகொண்டு வருகிறது என்பதால்தான் மாநில அரசுகள் இத்திட்டத்தில் சுணக்கம் காட்டுகின்றன. ஒரே மாநிலத்தில் உள்ள இரு நதிகளை இணைப்பதும்கூட, எடுத்துக்காட்டாக காவிரி - தாமிரபரணி இணைப்பு, சாத்தியமாகவில்லை. கிளை நதிகளின் நீரை, பல்வேறு பாசனத் திட்டங்களுக்காக சிற்றணைகள் மூலம் தடுத்து எடுத்துக்கொண்டுவிடுவது காலப்போக்கில் அதிகரித்துள்ளதே தவிர, குறையவில்லை. முக்கிய நதிகளுக்குத் தண்ணீர் வரத்து குறைந்துபோனதற்கு இது ஒரு முக்கிய காரணம். காவிரியின் கிளை நதிகளிலிருந்து பல திட்டங்களுக்காகத் தண்ணீரை எடுத்துக்கொண்ட பிறகு, எப்படி காவிரியில் ஆண்டு முழுவதும் தண்ணீர் ஓடும்? காவிரி- தாமிரபரணி இணைப்பை இரு ஆயக்கட்டுதாரர்களும் ஒப்புக்கொள்வார்களா?

இந்த நிலையில், நதிநீரை பன்னாட்டு நிறுவனங்களுக்குத் தாரை வார்க்கும் விதமாகவும், குடிநீர் மற்றும் பாசன நீர் பயன்பாட்டைக் கட்டணமாக்கும் விதமாகவும் நடுவண் அரசு நீர்க்கொள்கை உருவாக்கிக் கொண்டிருக்கிறது.

நதிகளை இணைத்து நீர்வளத்தை அனைத்து மக்களுக்கும் உரித்தாக்க வேண்டும் என்கின்ற கனவை ஒருபக்கம் காட்டுகிறார்கள். இன்னொரு பக்கம், நதிநீரை விலைபேசும் நீர்க்கொள்கை காலத்தின் கட்டாயம் என்ற கருத்தைப் பரப்புகிறார்கள். நதிகளோ நாளுக்குநாள் மெலிந்துபோய் வெறும் கழிவுநீர்க் கால்வாய்களாக மாறி வருகின்றன. நதிகளைத் தேசியமயமாக்காமல் ஒன்றும் செய்ய முடியாது. இந்நிலையில், இந்திய நதிகள் இணைப்பு எந்த அளவுக்குச் சாத்தியம்?

நாம் ஒரு விஷயத்தைத் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும். இந்தியாவில், நமது பிரச்னைகள் எல்லாமே மாநிலப் பிரச்னைகள். ஆனால், அதன் தீர்வோ தேசியத் தீர்வாக இருக்கிறது. இதை மாநிலங்களும் அரசியல் கட்சிகளும் புரிந்துகொள்ளாதவரையில் நதிநீர்ப் பிரச்னைகளுக்குத் தீர்வு ஏற்படப் போவதில்லை!

தினமலர்
உண்மையின் உரைகல்

**சின்னச்சின்ன செய்திகள்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 29,2012,00:00 IST



**வாழையில் மதிப்பூட்டுதல்**: வாழைப்பழத்தில்இருந்து உலர் வாழைப்பழம், பொடி, இணை உணவு, சர்க்கரைக் கரைசலில் வாழைப்பழம், கூழ், தெளிந்த வாழைப்பழ பானம், ஸ்குவாஷ், கார்டியல் ஜாம், ஜெல்லி, சட்னி, கெட்சப், மிட்டாய், பார், ஒயின், கேண்டி, ஊறுகாய், அல்வா, பாயசம், சிரப், தேன் மற்றும் சீவல்; வாழைக்காயிலிருந்து மாவு, சாஸ், சிப்ஸ், ஊறுகாய் மற்றும் கார உருண்டை; வாழைப்பூவில்இருந்து தொக்கு, பக்கோடா, வடை; வாழைத் தண்டிலிருந்து ஜூஸ், இனிப்பு கேண்டி ஆகியவைகளை குறைந்த செலவில் தயாரித்து வீட்டளவில் சிறு தொழிலாக தொடங்கி விற்பனை செய்யலாம். மேலும் வாழை உணவுப்பொருட்களில் தேவையான அளவு

பாதுகாப்பான்களைச் சேர்ப்பதன் மூலம் மூன்றிலிருந்து 12மாதங்கள் வரையில் கெடாமல் இருக்கும். இவ் வகை உணவுப் பொருட்களைத் தயாரிப்பதன் மூலம் அறுவடைக்குப்பின் வீணாவதைத் தடுப்பதுடன் அதிகளவு வருமானமும் ஈட்டலாம். மேலும் வாழை உற்பத்தியாளர்களுக்கு நல்ல விலையும் வேலைவாய்ப்பும் கிடைக்கும். (தகவல் முனைவர் லே.கற்பகப்பாண்டி, முனைவர் அ.சகுந்தலை, வேளாண்மை அறிவியல் நிலையம், த.வே. பல்கலைக்கழகம், சிறுகமணி, திருச்சி-639 105. 97864 87103).

**இருபடிப்பாத்தி**: "வழக்கமான முறையில் வெங்காயம் போடுறப்ப அதிகளவில் புண்ணாக்கு மேலுரமாக ஊட்டம் கொடுக்கணும். களை எடுப்புச் செலவும் அதிகமாகும். இரு படிப்பாத்தி அமைக்கிறப்போ செலவு குறைவதோடு வேலையும் குறைவு' என்று கூறுகிறார் திருச்சி மாவட்டம் துறையூர் தாலுகா செங்காட்டுப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த சிவசண்முகம். இவர் வேளாண் பொறியியல் துறையில் உதவிப் பொறியாளராக பணியாற்றிக்கொண்டே விவசாயத்தையும் செய்துவருகிறார். இவர் ஒரு இயற்கை விவசாய ஆர்வலர். அவருடைய 4 ஏக்கர் நிலத்தில் நெல் ஒரு ஏக்கர், சின்ன வெங்காயம் 2 ஏக்கர், மஞ்சள், கருணைக்கிழங்கு 20 சென்ட் மற்றும் காய்கறிகள் 5 சென்ட் நிலத்தில் போட்டு இருக்கிறார். 5 ஆண்டுகளாக இயற்கை விவசாயம் வெற்றிகரமாகச் செய்கிறார்.

தேர்வு செய்த நிலத்தில் முக்கால் அடி ஆழத்திற்கு உழவு ஓட்ட வேண்டும். 20 அடி இடைவெளியில் ஒன்றரை அடி ஆழத்தில் தெளிப்புநீர் குழாயைப் பதிக்க வேண்டும். தெளிப்புநீர் திறப்பான் 3 அடி உயரத்தில் இருக்க வேண்டும். 20 அடி தூரத்திற்கு ஒரு திறப்பான் அமைத்தால் போதும். 4 அடி அகலம், 25 அடி நீளம், முக்கால் அடி ஆழத்திற்கு மண்ணைப் பறித்து இருபுறமும் ஒதுக்கிவைக்க வேண்டும். குழியின் உள்ளே கடப்பாறையால் குத்தி மண்ணைக்கிளற வேண்டும். பின்னர் குழிக்குள் பாதி உயரத்திற்கு கம்பஞ்சக்கை, எள்ளு சக்கை, மக்காச்சோள சக்கை மற்றும் இலை தழைகள் என அனைத்தையும் இட்டு அதன்மீது தொழு உரத்தையும் போட்டு நிரப்ப வேண்டும். அதன்பிறகு மேல் மண்ணைப் பரப்பவேண்டும். இப்போது தரையிலிருந்து முக்கால் அடி உயரத்திற்கு மேட்டுப்பாத்தி அமைக்கப்பட்டிருக்கும். இது போல 2 அடி இடைவெளியில் வரிசையாக பாத்திகளை அமைத்துக்கொள்ள வேண்டும்.

பாத்திகளில் சணப்பு, அவுரி, கம்பு, சோளம், எள், பச்சைப் பயறு, தட்டைப்பயறு உள்ளிட்ட பல்தானிய விதைகளை சம விகிதத்தில் கலந்து விதைக்க வேண்டும். 75 சென்ட் நிலத்துக்கும் சேர்த்து மொத்தமாக 15 கிலோ விதை தேவைப்படும். அனைத்துப் பாத்திகளுக்கும் பொதுவாக 10

அடி இடைவெளிக்கு ஒருவிதை வீதம் ஆமணக்கு விதையை ஊன்ற வேண்டும். தொடர்ந்து 20 நாட்களுக்கு ஒருமுறை 7 லிட்டர் அமுதக்கரைசலை 70 லிட்டர் தண்ணீரில் கலந்து பாத்தியின்மீது தெளிப்பான் மூலம் தெளிக்க வேண்டும்.

இரண்டு மாதங்களில் பல தானியப்பயிர்கள் சுமார் 4 அடி உயரத்திற்கு வளர்ந்திருக்கும். ஆமணக்குச் செடியை தொந்தரவு செய்யாமல் பலதானியப் பயிர்களை மட்டும் வேரோடு பிடுங்கி, பாத்தி முழுவதும் பரப்ப வேண்டும். அதன்மீது கம்பு, எள், மக்காச்சோளச் சக்கைகளைப் போட்டு மூடாக்கு அமைத்து அரை அடி இடை வெளிக்கு ஒரு விதை வெங்காயம் என்ற கணக்கில் ஊன்ற வேண் டும். மூடாக்கின்மீது அழுத்திப் பதியுமாறு ஊன்றினால் போதுமானது. பலதானியத்துக்கு தெளித்ததுபோலவே அமுதக்கரைசலைத் தெளிக்க வேண்டும்.

நடவு செய்த ஒரு மாதத்துக்குள் களைகள் முளைத்தால் அவைகளைக் கைகளால் நீக்க வேண்டும். நடவு செய்த 70ம் நாளுக்கு மேல் சின்ன வெங்காயத்தை அறுவடை செய்யலாம். மகசூல் 75 சென்டிலிருந்து 4500 கிலோ வெங்காயம் கிடைத்தது. செலவு போக நிகர லாபமாக ரூ.64 ஆயிரம் கிடைத்தது. மேலும் விபரங்களுக்கு சிவசண்முகம், 94433 02650.-டாக்டர்

கு.சௌந்தரபாண்டியன்

## பட்டுப்புழு வளர்ப்பு (இளம்புழு வளர்ப்பு)

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 29,2012,00:00 IST



தமிழ்நாட்டு பட்டு உற்பத்தியில் நம் நாடு நான்காவது இடத்தைப் பெறுகிறது. 1956ம் ஆண்டுகளில் தமிழகத்தில் கோயம்புத்தூர், தர்மபுரி மாவட்டங்களில் மட்டும் குறைந்த அளவில் பட்டு வளர்ப்பு மேற்கொள்ளப்பட்டு வந்தது. பல செயல்பாட்டு திட்டங்களினால் பட்டு

வளர்ப்பானது, தமிழ்நாட்டில் இதர சமதளப்பரப்பிற்கும் பரவியது. 1979ஆம் ஆண்டிலிருந்து தொழில் மட்டும் வணிக துறையின்கீழ் பட்டு வளர்ப்பு துறை, சேலத்தை மையமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

ஆராய்ச்சி நிலையங்களினால் அறிமுகப்படுத்தப்பட்ட, புதிய செலவு குறைக்கும் தொழில்நுட்பங்களினால் (பட்டுப்புழுவிற்கான தனி அறை, மல்பெரி தண்டு அறுவடை முறையில் புழு வளர்ப்பு, இளம்புழுவை விவசாயிகளுக்கு வழங்குதல்) பட்டு மகசூலும் லாபமும் விவசாயிகளுக்கு அதிகமாக கிடைக்கிறது.

தற்சமயம் தமிழ்நாட்டில் 30,000 விவசாயிகளால் 35,000 ஏக்கர் அளவு மல்பெரி சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. காஞ்சிபுரம், கும்பகோணம், ஆரணி, சேலம், கோயம்புத்தூர், மதுரை மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் உள்ள நெசவு செய்யும் மையங்களில் கைத்தறியாக பட்டு நெய்யப்பட்டு வருகிறது.

**இளம்புழு வளர்ப்பு**: பட்டுப்புழு வளர்ப்புத் தொழிலில் மிகுந்த கவனம் தேவைப்படக்கூடிய ஒன்று, இளம்புழு வளர்ப்பாகும். பட்டுப்புழுக்களில் நோய்கள் வராமல் தடுக்க இளம் புழுக்களிலிருந்தே நல்ல சுகாதாரமான சூழலில் வளர்க்க வேண்டும். சரியான மல்பெரித் தழைகளைக் கொடுத்து வளர்ப்பறைகளில் தகுந்த வெப்பநிலை மற்றும் ஈரப்பதம் நிலவும் சூழ்நிலையில் இளம்புழுக்களை வளர்த்தால் அவை நோய் எதிர்க்கும் திறன் பெற்று பிறகு நல்ல மகசூலைத் தரவல்லது.

**இளம்புழு வளர்ப்பு அறை**: ஒவ்வொரு பட்டு விவசாயியும் இளம்புழு வளர்ப்பிற்கெனத் தனியாக ஓர் அறை வைத்திருக்க வேண்டும். இதனால் முதிர்ந்த புழுக்களை வளர்க்கும் இடங்களிலிருந்து கிருமித் தொற்றை தவிர்க்க முடியும். மேலும் இளம்புழு வளர்ப்பிற்கு சிறிய அளவே இடவசதி தேவைப்படுவதால் தட்பவெப்ப நிலையை சீராக வைத்திருக்க முடியும். இளம்புழு வளர்ப்பறைகளில் 28 செல்சியஸ் வெப்பநிலையும் காற்றில் ஈரப்பதம் 70 முதல் 80 சதமும் இருக்க வேண்டும். ஒரு ஏக்கர் மல்பெரித் தோட்டத்திற்கு இளம்புழு வளர்ப்பிற்கு சுமாராக 150 சதுர அடி பரப்பு கொண்ட வளர்ப்பறை தேவை. வளர்ப்பறை 15 x 10 x 16 என்ற அளவில் அமைக்க வேண்டும். நான்கு பக்கமும் கதவுகள் கொண்ட ஜன்னல்களை அமைக்க வேண்டும்.

**இளம்புழு வளர்ப்பு சாதனங்கள்**: இளம்புழுக்களை வளர்க்க இதற்கெனப் பிரத்யேகமாகச் செய்யப்படும் 3 x 2 அடி அளவுள்ள பிளாஸ்டிக் அல்லது மரத்தட்டுகளைப் பயன்படுத்திக் கொள்ளலாம். தட்டுகளை ஒன்றன் மேல் ஒன்றாக அடுக்கியோ அல்லது அவற்றை தாங்கிகளில் வைத்தோ புழுக்களை வளர்க்கலாம்.

ஐந்து முதல் ஏழு நாட்களில் பட்டுக்கூடுகள் உறுதியாகும்போது பட்டுக்கூடுகளை அறுவடை

செய்யலாம். அறுவடை செய்யப்பட்ட பட்டுக்கூடுகள் இதற்கென அரசாங்கத்தால் அமைக்கப்பட்ட பட்டுக்கூடு சந்தைகளுக்கு உடனடியாக விற்பனைக்கு எடுத்துச் செல்லப்பட்டு விற்கப்படுகின்றன. தொடர்புக்கு: எம்.அகமது கபீர், வேளாண்மை ஆலோசகர், 268/77, பழைய ஹவுசிங் யூனிட், எல்லீஸ் நகர் (அஞ்சல்), தாராபுரம்-638 657.-எம்.அகமது கபீர், 93607 48542.

**மண் புழு உரம் தயாரிக்க பயிற்சி**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 29,2012,02:44 IST

கருத்தை பதிவு செய்ய

தேன்கனிக்கோட்டை : தேன்கனிக்கோட்டை அடுத்த போகசந்திரம் கிராமத்தில் மைராடா தொண்டு நிறுவனம் நபார்டு வங்கி சார்பில் விவசாயிகளுக்கு மண் புழு உரம் தயாரித்தல் குறித்த விழிப்புணர்வு முகாம் மற்றும் பயிற்சி நடந்தது.

மைராடா தோட்டக்கலை அலுவலர் ராஜலட்சுமி வரவேற்றார். நபார்டு வங்கி துணை பொதுமேலாளர் சிதம்பரநாதன் துவக்கி வைத்து பேசினார். திட்ட அலுவலர் சங்கர் பிரசாத் தலைமை வகித்தார்.

கூட்டுறவு இணை பதிவாளர் கிருஷ்ணமூர்த்தி, வட்டாட்சியர் ரவி, மைராடா சீனியர் மேலாளர் ராஜசேகர், மண்புழு உரம் தயாரித்தல் மற்றும் அதன்சிறப்பு குறித்து எடுத்து கூறினர். வேளாண் அலுவலர் சாகுல் ஹமீத், மண் புழு உரம் தயாரித்தலில் புதிய தொழில்நுட்பம் குறித்து விளக்கினார்.

பட்டு வளர்ச்சித்துறை அலுவலர் தீர்த்தகிரி, இருதுகோட்டை ஊராட்சி தலைவர் சதீஷ்குமார், ஒன்றிய கவுன்சிலர் சீனிவாசன், துணைத்தலைவர் ஜெயப்பா, பெரியசாமி, மோகன் மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**மதிப்பு கூட்டு பொருட்கள் விற்பனையும் அதிகரிப்பு**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 29,2012,02:11 IST

கருத்தை பதிவு செய்ய

தர்மபுரி மாவட்டத்தில் தேங்காய் மதிப்பு கூட்டு பொருட்கள் தயார் செய்தும் விவசாயிகள் நேரடி தொழில் ஈடுபட்டு வருகின்றனர். குறிப்பாக வினிகர் தயாரித்தல், தேங்காய் பால் கேக், தேங்காய்

லட்டு, தேங்காய் பருப்பிகள் உள்ளிட்டவைகள் தயார் செய்து விற்பனை செய்ய துவங்கியுள்ளனர். இதனால், கோடை காலங்களை தவிர மற்ற நாட்களிலும் தேங்காய்க்கு விற்பனை வரவேற்பு ஏற்பட்டுள்ளது. உள்ளூர் சந்தையில் தேங்காய் விலை சீரான நிலையில் இருந்த போதும், கடந்தாண்டை விட இந்தாண்டு தேங்காய் விலையில் 2 ரூபாய் வரையில் அதிகரித்துள்ளது. தேங்காய் கொப்பரைக்கு கடந்த காலங்களை விட இந்தாண்டு விலை எதிர்பார்த்த அளவு இல்லாததாலும், வெளி மாவட்டங்களுக்கு தேங்காய் கொப்பரை விற்பனை செய்யும் நிலை ஏற்பட்டதால், உள்ளூர் தேவைக்கு மட்டும் தேங்காய் கொப்பரை விற்பனை செய்யப்படுகிறது.

**தோட்டத்தில் திடீர் தீ: உருளை கிழங்கு நாசம்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 29,2012,01:34 IST

கருத்தை பதிவு செய்ய

ஓசூர்: மத்திகிரி அருகே தோட்டத்தில் விற்பனைக்காக அடுக்கி வைத்திருந்த உருளைக்கிழங்கு மூட்டைகள் எரிந்து நாசமடைந்தன.மத்திகிரி அடுத்த நாகொண்டப்பள்ளியை சேர்ந்தவர் நாராயணப்பா. இவர் தனக்கு சொந்தமான இரண்டு ஏக்கர் தோட்டத்தில் உருளை கிழக்கு சாகுபடி செய்திருந்தார். கடந்த சில நாளுக்கு முன் உருளைகிழங்குகளை அறுவடை செய்து தோட்டத்தில் மூட்டை, மூட்டையாக அடுக்கி வைத்திருந்தார்.

நேற்று முன்தினம் நள்ளிரவு திடீரென உருளை கிழங்கு மூட்டைகள் தீயில் எரிந்தன. தகவல் அறிந்த நாராணப்பா மற்றும் அவரது உறவினர்கள் தீயணைப்பு நிலையத்திற்கு தகவல் தெரிவித்தனர். தீயணைப்பு வீரர்கள் சம்பவ இடத்திற்கு வந்து, தீ மேலும் பரவாமல் இருக்க அணைத்தனர்.

இந்த தீ விபத்தில் உருளை கிழங்கு மூட்டைகள் தீ பிடித்து எரிந்து நாசமடைந்தன. நாராயணப்பா தோட்டத்துக்கு அருகில் உள்ள விவசாய நிலத்தில் போட்டிருந்த சொட்டு நீர் பாசன குழாய்களும் தீயில் எரிந்தன. இந்த தீ விபத்து எப்படி ஏற்பட்டது என தெரியவில்லை. இதுகுறித்த புகாரின் பேரில் மத்திகிரி போலீஸார் விசாரிக்கின்றனர்.

**காய்கறி விலை கடும் உயர்வு: எதை எடுத்தாலும் கிலோ ரூ.25**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 29,2012,02:35 IST

கருத்தை பதிவு செய்ய

ஈரோடு : ஈரோட்டில் காய்கறி விலை கடுமையாக உயர்ந்துள்ளது. பெரும்பாலான காய்கள் 28 ரூபாயில் துவங்கி, 60 ரூபாய் வரையான விலையில் விற்கப்படுகிறது.

ஈரோட்டுக்கு, ஆந்திரா, கர்நாடகா, மேட்டுப்பாளையம், ஓசூர் மற்றும் உள்ளூரில் இருந்தும், காய்கறிகள், கீரைகள் விற்பனைக்கு வருகின்றன. 40 முதல், 60 லோடு காய்கறிகள் தினமும் லாரிகள் மூலமாக விற்பனைக்கு வருகின்றன.
தவிர, உள்ளூர் காய்கறிகள் வேன், பஸ்கள் மூலமாக விற்பனைக்கு கொண்டு வரப்படுகிறது. நகரில் உள்ள மார்க்கெட்களில் இருந்து, சில்லறை விற்பனை கடைகளுக்கும், மாவட்டத்தின் பிற பகுதிகளுக்கும் விற்பனைக்கு வாங்கிச் செல்கின்றனர். பொதுவாகவே, வறட்சியான காலங்கள், புரட்டாசி, கார்த்திகை, மார்கழி, சித்திரை ஆகிய மாதங்களில் விரத நாட்களில் காய்கறி தேவை அதிகரித்து, அவற்றின் விலை உயரக்கூடும்.
கடந்த இரண்டு ஆண்டுகளாக தேவைக்கும் அதிகமாக மழை பெய்துள்ளது. காய்கறிகள் உற்பத்தியும் அதிகரித்தது. ஜனவரிக்கு பின், ஃபிப்ரவரி முதல் வாரம் வரை ஓரளவு கட்டுப்படியான விலையில் காய்கறிகள் விற்கப்பட்டன.
கடந்த சில வாரங்களாக விலை அதிகரித்துக் கொண்டே செல்கிறது. கடந்த மாதம் கிலோ மூன்று ரூபாய் வரை விற்கப்பட்ட தக்காளி, தற்போது, 18 ரூபாய், கிராஸ் 20 ரூபாய், ஆப்பிள் (பெங்களூரு) 22 ரூபாய்க்கும் விற்கப்படுகிறது. காரட் 26 ரூபாய், டில்லி காரட் 40, பீன்ஸ் 40, கத்தரிக்காய் 28, முள்ளங்கி 24, முள்ளங்கி சிவப்பு 28, வெண்டைக்காய் 28, கொத்தவரை 28, அவரை 24, உருளை கிழங்கு 16 ரூபாய், பீட்ரூட் 14, பூசணி கிலோ 12 ரூபாய்க்கும், பச்சை மிளகாய் மற்றும் இஞ்சி ஆகியவை கிலோ 40 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது. சிறிய மற்றும் பெரிய வெங்காயம் மட்டும் கிலோ, 10 ரூபாய்க்கு ஆறுதல் அளிக்கிறது.
வழக்கமாக ஜனவரி முதல் ஏப்ரல் முதல் வாரம் வரை, காய்கறி வரத்து அதிகரித்து, விலை சரிவை சந்திக்கும். அதன் பின், கோடை துவங்கியதும் காய்கறி மற்றும் பழங்களின் விலை அதிகரிக்கும். நடப்பாண்டு, வரத்து அதிகம் இருந்த போதிலும், விலை குறையவில்லை. இனி வரும் வாரங்களில் மேலும் அதிகரிக்கும் என வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

### குடமிளகாய் சரிந்தாலும் குறையாத பஜ்ஜி விலை

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 29,2012,02:35 IST

கருத்தை பதிவு செய்ய

ஈரோடு : குட மிளகாய் வரத்து அதிகரிப்பு காரணமாக விலையும் குறைந்துள்ளது. எனினும், பஜ்ஜி விலை குறையவில்லை.
கொடைக்கானல், ஊட்டி, திண்டுக்கல், கிருஷ்ணகிரி மாவட்டம் தேன்கனிக்கோட்டை, தளி, அஞ்செட்டி உள்ளிட்ட பகுதியில் அதிக பரப்பளவில் குட மிளகாய் சாகுபடி செய்யப்படுகிறது. இங்கிருந்து, பெங்களூரு, கேரளா மற்றும் தமிழகத்தில் மாவட்டம் முழுவதும் விற்பனைக்கு அனுப்பி வைக்கின்றனர்.

ஒரு மாதமாக குட மிளகாய் சீஸன் துவங்கியதில் இருந்து, மார்க்கெட்டுக்கு வரத்து அதிகரித்துள்ளது. பெரும்பாலும், குட மிளகாயில் காரத்தன்மை குறைவாக உள்ளதால், அனைத்து மக்களும் விரும்பி வாங்கிச் செல்கின்றனர். தவிர, ஹோட்டல்கள், ஃபாஸ்ட் புட் கடைக்காரர்களும் அதிகளவு வாங்கி செல்கின்றனர்.

கிலோ 35 ரூபாய்க்கு விற்ற குட மிளகாய், தேவைக்கு அதிகமாக வரத்து இருப்பதால், இரண்டே நாளில், ஐந்து ரூபாய் குறைந்து, 30 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. மேலும், விலை குறைய வாய்ப்புள்ளது என வியாபாரிகள் நம்பிக்கை தெரிவிக்கின்றனர்.

டீக்கடைகள், பலகாரக் கடைகளில் அனைத்து வித பலகாரங்களும் மூன்று ரூபாயில் இருந்து, ஒரு மாதத்துக்கு முன் நான்கு அல்லது ஐந்து ரூபாய்க்கு விற்கப்படுகின்றன.

குடமிளகாய் பஜ்ஜி விலை குறைந்த போதும், பஜ்ஜி விலை குறையாமல், நான்கு ரூபாய்க்கே விற்கப்படுகிறது.

**ஆமணக்கு சாகுபடியில் விவசாயிகள் ஆர்வம்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 29,2012,02:35 IST

கருத்தை பதிவு செய்ய

கோபிசெட்டிபாளையம் : அழகு சாதனங்கள் உற்பத்திக்கு பயன்படும் ஆமணக்கு சாகுபடியில் கோபி விவசாயிகள் ஆர்வம் காட்டுகின்றனர்.

கோபி வட்டாரத்தில் வாய்க்கால் பாசனப்பகுதியை தவிர்த்து, கிணற்று பாசனம் மற்றும் மானாவாரி நிலங்கள் அதிகளவில் உள்ளன. மானாவாரியில் நிலக்கடலை, கொள்ளு, எள், சோளப்பயிர் போன்றவை அதிகம் சாகுபடி செய்யப்படுகிறது. கோபி, நம்பியூர், கொளப்பலூர், கெட்டிசெவியூர், பள்ளிபாளையம், சிறுவலூர் உள்ளிட்ட பகுதிகளில் மானாவாரியில் நிலக்கடலை, கொள்ளு அதிகளவில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. நிலக்கடலை, கொள்ளுச் செடியில் ஊடுபயிராகவும், கலப்பு பயிராகவும் ஆமணக்கு சாகுபடி செய்யப்பட்டுள்ளது. நிலக்கடலை, கொள்ளு ஆகியவை 100 நாட்கள் பயிர்.

ஆமணக்கு செடிகள் நன்கு வளர்ந்து காணப்படுகிறது. ஆமணக்கு கொட்டைகள் அழகு சாதனப் பொருள் உற்பத்திக்கும், சித்த மருத்துவத்தில் மருந்துப் பொருளாகவும் பயன்படுகிறது. இதனால், ஆமணக்கு விதைக்கு நல்ல வரவேற்பு உள்ளது. கோபி சுற்று வட்டார விவசாயிகள் ஆர்வமுடன் சாகுபடி செய்து வருகின்றனர்.

கோபி வட்டார வேளாண் உதவி இயக்குனர் பொறுப்பு ஆசைத்தம்பி கூறியதாவது:

கோபி வட்டாரத்தில் மானாவாரியில், 200 ஏக்கரில் ஆமணக்கு ஊடுபயிராகவும், கலப்பு பயிராகவும் சாகுபடி செய்யப்படுகிறது. டி.எம்.வி., 4, 5, 6 ஆகிய மூன்று ரகங்கள் உள்ளன. டி.எம்.வி.,- 6 ரகம் ஆறு மாத பயிராகும். டி.எம்.வி., 4, 5 ஆகியவை நான்கு மாதப் பயிர். ஒரு

ஏக்கரில் ஆமணக்கு கலப்பு பயிராக சாகுபடி செய்து இருந்ததால் 200 முதல் 500 கிலோ வரை கிடைக்கும். ஒரு கிலோ ஆமணக்கு 40 ரூபாய் என விற்பனை செய்தால், ஏக்கருக்கு 8,000 முதல் 20 ஆயிரம் ரூபாய் வரை கூடுதல் லாபம் பெற முடியும்.
ஆமணக்கு செடியை பொறுத்தவரை கடும் வறட்சியிலும் பசுமையாக வளரக் கூடிய தன்மை கொண்டது. ஆமணக்கு பயிரிட்டால் விவசாயிகளுக்கு கூடுதல் வருவாய் கிடைக்க வாய்ப்புள்ளது. கோபி வட்டார விவசாயிகள் எள்ளு, கொள்ளு, நிலக்கடலை போன்ற பயிர்களுடன் ஊடுபயிராக ஆமணக்கு பயிர் செய்து வருகின்றனர்.இவ்வாறு அவர் கூறினார்.

**பயறு விளைச்சல் அதிகரிக்க நுண்ணீர் பாசன திட்டம்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 29,2012,01:25 IST

கருத்தை பதிவு செய்ய

தேனி :தேனி மாவட்டத்தில் பயறு வகை விளைச்சலை பெருக்க நுண்ணீர் பாசன திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.
விவசாய இணை இயக்குனர் இமாம்தீன் கூறியதாவது: பயறு வகை உற்பத்தியை பெருக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு, குறைந்த நீரினை பயன் படுத்தி அதிக பரப்பில் சாகுபடி செய்ய வேண்டும் என்ற நோக்கத்தோடு பயறு வகை பயிர்களுக்கு 100 சதவீத மானியத்தில் தெளிப்புநீர் பாசன கருவி, மழைநீர் தூவுவான் கருவிகள் 200 பேருக்கு வழங்கப்பட உள்ளது. இதற்காக 42 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு பயனாளிகள் தேர்வு நடந்து வருகிறது.
கரும்பு, மக்காச்சோளம், பருத்தி பயிர்களில் குறைந்த நீரை கொண்டு அதிகளவு சாகுபடி செய்ய, துல்லிய பண்ணைய திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தில் 25 லட்சம் ரூபாய் மானியம் வழங்கப்பட்டு 100 எக்டேர் பரப்பில் செயல்படுத்தப்பட உள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

**பஞ்சு விலை சரிவு; பருத்தி விவசாயிகள் வேதனை**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 29,2012,00:24 IST

திருப்பூர் : பஞ்சு விலை பாதியாக குறைந்ததால், சாகுபடி செலவைக் கூட எடுக்க முடியாத நிலை உள்ளதாக, பருத்தி விவசாயிகள் வேதனை தெரிவித்துள்ளனர்.
மண் வளம், சீதோஷ்ண நிலை காரணமாக, 20 ஆண்டுகளுக்கு முன், திருப்பூர் மாவட்ட பகுதிகளில் பல ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் பருத்தி சாகுபடி செய்யப்பட்டது. அதையொட்டி உருவான நூற்பாலைகள் சிறப்பாக இருந்தன. பருத்தி சாகுபடியை திடீரென தாக்கிய வெள்ளை ஈ; சீதோஷ்ண நிலை மாற்றம்; வருவாய் குறைவு போன்ற காரணங்களால் பருத்தி சாகு படியை விவசாயிகள் தவிர்த்தனர்.தற்போது, பருத்தி சாகுபடி மீது விவசாயிகள் மீண்டும் ஆர்வம்

காட்டி வருகின்றனர். திருப்பூர், ஊத்துக்குளி, பொங்கலூர், தாராபுரம், குண்டடம் உள்ளிட்ட பகுதிகளில் பருத்தி சாகுபடி துவங்கியுள்ளது. இப்பகுதிகளில் சுமார் 20 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் பருத்தி சாகுபடி செய்யப்பட்டுள்ளது. ஆறு மாத பயிர், குறைந்த தண்ணீர் தேவை, அதிக வருமானம் என, ஆர்வமாய் களமிறங்கிய விவசாயிகள், அறுவடை சமயத்தில் விலை சரிந்துள்ளதால் அதிர்ச்சி அடைந்துள்ளனர். விதைப்பு சமயத்தில் பஞ்சு கிலோ 67 ரூபாய்க்கு விற்று வந்தது; தற்போது 35 ரூபாயாக குறைந்துள்ளதோடு, மகசூலும் குறைந்துள்ளதால் சாகுபடிக்கு செய்த முதலீடு தொகையை எடுக்க முடியாத நிலையில் உள்ளனர். விவசாயி வரதராஜ் கூறியதாவது:

விதை கிலோ ஆயிரம் ரூபாய், நான்கு முறை மருந்து, களை எடுத்தல் என ஏக்கருக்கு தற்போது வரை 30 ஆயிரம் ரூபாய் வரை செலவாகியுள்ளது. மேலும், அறுவடைக்கு ஆட்கள் செலவு உள்ளது. ஆறு மாதத்துக்கு முன் பஞ்சு கிலோ 67 ரூபாய் வரை இருந்தது. இதனால், நல்ல லாபம் கிடைக்கும் என எதிர்பார்த்திருந்தோம். அறுவடை சமயத்தில் விலை பாதியாக குறைந்துள்ளது. வழக்கமாக ஏக்கருக்கு 700 கிலோ வரை பஞ்சு மகசூல் இருக்கும்.

தற்போது, மகசூலும் குறைந்துள்ளது. அறுவடை செய்தால், சாகுபடிக்கு செலவழித்த தொகையை கூட திரும்ப எடுக்க முடியாத நிலை உள்ளதோடு, ஏக்கருக்கு 10 ஆயிரம் வரை நஷ்டம் ஏற்படும் நிலை உள்ளது. பருத்திக்கு உரிய விலை கிடைக்கவும், விலை நிர்ணயம், விற்பனை சந்தை, சாகுபடி தொழில்நுட்பம் உள்ளிட்ட வசதிகளை புனரமைக்க அரசு நடவடிக்கை எடுத்தால் மட்டுமே மீண்டும் பருத்தி சாகுபடியில் விவசாயிகள் ஆர்வம் காட்டுவர்' என்றார்.

**"தானே' புயலால் தர்பூசணி மகசூல் பாதிப்பு**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 28,2012,21:59 IST

கருத்தை பதிவு செய்ய

"தானே' புயலின்போது வீசிய தொடர் மழையால், தர்பூசணி மகசூலில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இதனால், ஒரு ஏக்கருக்கு, 10 டன்னுக்கு பதில், 5 டன் தர்பூசணி மட்டுமே விவசாயிகள் பெற்றுள்ளனர்.

கும்மிடிப்பூண்டி பகுதியில் உள்ள மாதர்பாக்கம், மாநெல்லூர், கண்ணம்பாக்கம், தேர்வாய், தொக்கமூர், எகுமதுரை, செதில்பாக்கம், போந்தவாக்கம் உள்ளிட்ட கிராமங்களில், 500 ஏக்கர் பரப்பில் அப்பகுதி விவசாயிகள் தர்பூசணி சாகுபடி செய்து வருகின்றனர். வளமிக்க செம்மண் நிலமான இப்பகுதிகளில் விளையும் தர்பூசணி பழங்களை ராஜஸ்தான், உத்தரபிரேதசம், டில்லி, குஜராத், ஆந்திரா போன்ற வெளி மாநில வியாபாரிகள் ஏராளமானோர் டன் கணக்கில் வாங்கிச் செல்கின்றனர்.

இப்பகுதி சாகுபடியாளர்கள் ரியா, நாம்தாரி, டிராகன் கிங் போன்ற உயர்தர தர்பூசணி விதைகளை, கிலோ, 3,500 முதல், 5,200 ரூபாய் வரை பெங்களூரில் இருந்து வாங்கி வருகின்றனர். மூன்று ஏக்கர் நிலத்திற்கு ஒரு கிலோ விதை விதைக்கின்றனர். உயர் ரக விதைகளால் அதிக மகசூலில் நல்ல சுவைமிக்க பழங்கள் கிடைப்பதுடன் வெளி மாநிலங்களுக்கு எடுத்து செல்ல, 10 நாட்கள் ஆனாலும் பழங்களுக்கு பாதிப்பு ஏற்படாது.
தர்பூசணி காலம் என்பது விதை விதைத்த 60 நாட்களிலிருந்து 75 நாட்கள் வரை மட்டுமே. டிசம்பர் துவக்கத்தில் விதை விதைக்கப்பட்டு பிப்ரவரி முதல் பழ அறுவடை செய்யப்படுகிறது.

நன்கு விளைந்த தர்பூசணி பழம் ஒரு டன் 5,000 ரூபாய் வரை மொத்த விலைக்கு விற்கப்படுகிறது. தர்பூசணி பழம் ஒரு டன், 5,000 ரூபாய் வரை விற்கப்படுகிறது. ஒரு ஏக்கருக்கு, 10 டன் தர்பூசணி வரை கிடைக்கப் பெற்ற அப்பகுதி சாகுபடியாளர்கள், இவ்வாண்டு ஒரு ஏக்கருக்கு, 5 டன் மட்டுமே கிடைத்ததாக தெரிவித்தனர்.
எதிர்பார்த்த விளைச்சலின்றி பாதிக்கு பாதி விளைச்சல் குறைந்தது குறித்து மாதர்பாக்கம் விவசாயி காந்தி கூறும்போது, "பொதுவாக தர்பூசணி சாகுபடியின் போது ஒரு நாள் விட்டு ஒரு நாள் நீர் பாய்ச்ச வேண்டும். நிலத்தின் ஈரத் தன்மை குறையவும் கூடாது. அளவுக்கதிகமான ஈரமும் இருக்கக் கூடாது.
கடந்த டிசம்பர் மாதம் வீசிய "தானே' புயலின் போது பெய்த தொடர் மழை காரணமாக, தர்பூசணி கொடியின் வளர்ச்சி பாதிக்கப்பட்டு, குறைந்தளவில் பழங்கள் விளைந்ததுடன் எடையிலும் குறைவு ஏற்பட்டது. இதனால் கடந்தாண்டு மகசூலை விட இவ்வாண்டு பாதிக்கு பாதி மட்டுமே கிடைக்கப் பெற்றோம்' என தெரிவித்தார்.

## கடலூருக்கு யூரியா மூட்டைகள்ரயிலில் வந்தன

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 28,2012,23:11 IST

கருத்தை பதிவு செய்ய
முதுநகர்:தூத்துக்குடியில் இருந்து ரயில் மூலம் கடலூருக்கு 2,600 டன் யூரியா வந்தது.தூத்துக்குடியில் இருந்து ரயில் மூலம் கடலூர் மாவட்டத்தில் உள்ள "கொரமண்டல்' தனியார் நிறுவனத்திற்கு 2,600 டன் யூரியா நேற்று முன்தினம் முதுநகர் ரயில் நிலையம் வந்தது. ரயிலில் இருந்த யூரியா உர மூட்டைகளை லாரிகளில் ஏற்றும் பணி நேற்று முதல் துவங்கியது.

இப்பணியில் அப்பகுதியைச் சேர்ந்த ஏராளமான தொழிலாளர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.விழுப்புரம் - மயிலாடுதுறை அகல ரயில் பாதையாக மாற்றப்பட்ட பின்னர் நாகார்ஜுனா கம்பெனிக்கு உர மூட்டைகள் ஏற்றிய ரயில் வந்தது. நீண்ட நாட்களுக்குப் பிறகு தற்போது யூரியா உரம் வந்துள்ளது.
இதனைத்தொடர்ந்து, இன்று (29ம் தேதி) தூத்துக்குடியில் இருந்து யூரியா உரம் ரயில் மூலம் கடலூர் முதுநகர் ரயில் நிலையத்திற்கு வருகிறது.

---

**வேலூர் மாவட்டத்தில் காய்கறிகளை சேமிக்க 4 குளிர்பதன கிடங்கு வேளாண்மை அதிகாரி தகவல்**

பதிவு செய்த நேரம்:2012-02-29 10:05:41

வேலூர்: வேலூர் மாவட்டத்தில் 4 இடங்களில் காய்கறிகளை சேமிக்க குளிர்பதன கிடங்குகள் அமைக்கப்பட உள்ளதுÕ என்று வேளாண்மை விற்பனைத்துறை துணை இயக்குனர் தெரிவித்தார்.
தோட்டக்கலைத் துறை மற்றும் மலைப்பயிர்கள் துறை சார்பில் வேலூரில் விவசாயிகளுக்கு மாவட்ட அளவிலான 2 நாள் கருத்தரங்கம் நேற்று தொடங்கியது. இதில் ஒன்றியத்துக்கு 10 பேர் வீதம் 200 விவசாயிகள் கலந்துகொண்டனர்.
வேளாண்மைத் துறை இணை இயக்குனர் தமிழ்ச்செல்வன் தலைமை தாங்கினார்.
விவசாயிகளுக்கு அரசு வழங்கும் திட்டங்கள் குறித்து வேளாண் அதிகாரிகளும், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் சாகுபடி, பராமரிப்பு முறைகள் குறித்து தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக பேராசிரியர்களும் விளக்கம் அளித்தனர்.
நிகழ்ச்சியில் வேளாண் பொறியியல் துறை செயற்பொறியாளர் இன்பநாதன் பேசும்போது, Ôவிவசாய கருவிகள் 25 முதல் 50 சதவீத மானியத்தில் அரசால் வழங்கப்படுகிறது. பாசன வசதி குறைவாக உள்ள பகுதிகளில் மழைநீரை சேமிக்க பண்ணைக் குட்டைகள் அமைக்க அரசு முழு தொகையையும் மானியமாக வழங்குகிறது. நாட்றம்பள்ளி பகுதியில் 100க்கும் மேற்பட்ட பண்ணைக் குட்டைகள் அமைக்கப்பட்டுள்ளதுÕ என்றார்.
வேளாண்மை விற்பனைத்துறை துணை இயக்குனர் எல்லப்பன் பேசும்போது, Ôவேலூர் மாவட்டத்தில் 13 இடங்களில் ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள் உள்ளன. இதில் வாடகை

கட்டிடத்தில் இயங்கும் விற்பனைக் கூடங்களுக்கு சொந்த கட்டிடம் கட்ட அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.
காய்கறிகளை சேமித்துவைத்து விற்பனை செய்ய திருப்பத்தூர், வாணியம்பாடி, காட்பாடி, வேலூரில் 25 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட குளிர்பதன கிடங்குகள் அடுத்த ஆண்டு அமைக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறதுÕ என்றார்.
உழவர் பயிற்சி நிலைய துணை இயக்குனர் ராமசாமி உட்பட பலர் கலந்துகொண்டனர். இந்த கருத்தரங்கம் இன்று நிறைவு பெறுகிறது.

**காய்கறி சந்தைகளில் விலைப்பட்டியல் வைக்க கோரிக்கை**

பதிவு செய்த நேரம்:2012-02-29 10:00:49

அருமனை: அருமனை ஒய்.எம்.சி.ஏ. தலைவர் ஜெயசிங் கலெக்டருக்கு அனுப்பியுள்ள மனுவில் கூறியிருப்பதாவது:
குமரி மாவட்டத்தில் முக்கிய காய்கறிச் சந்தைகளாக வடசேரி கனக மூலம் சந்தை, ஒழுகினசேரி அப்டா மார்க்கெட், மார்த்தாண் டம் சந்தை, கருங்கல், திங்கள்நகர் ஆகிய சந்தைகள் விளங்குகிறது.
இச்சந்தைகளில் குமரி மாவட்டம் மட்டுமின்றி கேரளாவைச் சேர்ந்த ஏராளமானோர் வந்து காய்கறிகளை வாங்கிச் செல்வதால் தினமும் லட்சக்கணக்கான ரூபாய்க்கு வியாபாரம் நடக்கிறது.
ஆனால் இந்த சந்தைகளிலுள்ள கடைகளில் காய்கறிகளின் விலைப்பட்டியல் வைக்கப்படுவதில்லை.
இதனால் அதிக விலைக்கு விற்பனை செய்து சாதாரண மக்களை ஏமாற்றும் போக்கு உள்ளது.
எனவே குமரி மாவட்ட காய்கறி சந்தைகளிலுள்ள கடைகளில் விலைப்பட்டியல் வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

**அதிக லாபம் பெற தொழில்நுட்பத்துடன் தரிசில் பயறு சாகுபடி வேளாண் அதிகாரி யோசனை**

பதிவு செய்த நேரம்:2012-02-28 10:47:18

திருச்சி: திருச்சி விதை ஆய்வு துணை இயக்குனர் ரங்கராஜன் தெரிவித்திருப்பதாவது: நெல் அறுவடைக்கு பின்னர் குறுகிய கால பயர்களாகிய பயறு வகை பயிர்கள் மற்றும் எள் சாகுபடி செய்து அதிக வரு மானம் பெறலாம். விதை களை உரிமம் பெற்றுள்ள விதை விற்பனை நிலையங்க ளில் மட்டுமே வாங்க வேண்டும். ஏடிடி5, ஏடிடி3 மற்றும் டி9 உளுந்து விதை கள், டிஎம்வி 3 மற்றும் டிஎம்வி 4 போன்ற எள் விதைகள் விதை விற்பனை நிலையங்களில் இருப்பு உள் ளது. விதை கொள்கலனில் விவர அட்டை பொருத்தப்பட்டுள்ளனவா, விவர அட் டையில் பயிர்,

ரகம், குவி யல், எண், காலாவதி நாள், உற்பத்தியாளர் பெயர் மற் றும் சாகுபடிக்கு ஏற்ற பரு வம் ஆகிய விவரங்கள் குறிப்பிட்டுள்ளனவா என விவசாயிகள் பார்த்து வாங்க வேண்டும். விதைகளுக்கு ரசீது மற்றும் அவ்விதைகளுக்குரிய சாகுபடி குறிப்புக ளையும் கேட்டு வாங்கி உரிய காலத்தில் உரிய தொழில் நுட்பங்களை கடை பிடிக்க வேண்டும். விதை விற்பனை நிலையத் தில் எந்த விதை வாங்கினா லும் அதற்குரிய ரசீதை கேட்டு வாங்குவது டன் அதில் குவியல் எண் மற்றும் காலாவதி நாள் குறிப்பிடப்பட்டுள்ளதா என்பதை அறிந்து ரசீதை பயிர் அறு வடை முடியும் வரை பத்திரமாக வைத்திருக்க வேண் டும். விவரங்களுக்கு அருகிலுள்ள வேளாண் அலுவலர் களை தொடர்பு கொண்டு தொழில்நுட்ப ஆலோசனைபடி பயிர் சாகுபடி செய் யலாம். இவ்வாறு ரங்கராஜன் கூறியுள்ளார்.

**இயற்கை விவசாய கருத்தரங்கு**

பதிவு செய்த நேரம்:2012-02-28 10:42:03

தூத்துக்குடி: பாரத மாதா உழவர் மன்றம் சார்பில் தூத்துக்குடி அருகேயுள்ள முடிவைத்தானேந்தலில் மண்புழு உரம் தயாரித்தல் மற்றும் இயற்கை விவசாயம் தொடர்பான கருத்தரங்கம் நடந்தது. முடிவைத்தானேந்தல் பஞ்சாயத்து தலை வர் வீரமாகாளி தலைமை வகித்தார். நபார்டு வங்கி மேலாளர் நடராஜன் முன்னிலை வகித்தார். சண்முகம் வரவேற்றார். கருத்தரங்கில் கிள்ளிகுளம் வேளாண்மை கல்லூரி பேராசிரியர் ஜோசப், ஸ்காடு வேளாண் அறிவியல் மைத்தின் முருகன், அசோக்குமார், உதவி வளர்ச்சி அலுவலர் பரமசிவன், ஸ்பிக் வேளாண் சேவைப்பிரிவு களப்பணியாளர் சின்னகாளியப்பன் ஆகியோர் கலந்துகொண்டு மண்புழு உரம் தயாரித்தல் மற்றும் இயற்கை விவசாயம், மண்பரிசோதனை குறித்து எடுத்துரைத்தனர். இதில் விவசாயிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர். முத்துலட்சுமி நன்றி கூறினார்.